ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

धृतराष्ट्र उवाच—

सनत्सुजात यदिदं शृणोमि न मृत्युरस्तीति तव प्रवादम् ।
देवासुराह्याचरन्ब्रह्मचर्यं अमृत्यवे तत्कतरन्नु सत्यम् ॥

ஹே! ஸநத்குமாரரே! தாங்கள் மிருத்தியுவானது இல்லையென்று (சிஷ்யர்களுக்கு) உபதேசித்திருப்பதாக (விதுரரிடமிருந்து) கேள்விப் படுகிறேன். தேவர்களும், அஸுரர்களும், மரணமேற்படாமலிருப்பதற்காக (குருகுலத்தில்) பிரும்மசர்யம் அனுஷ்டித்துவந்தார்கள் என்றும், (சுருதிகளிலிருந்து) கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே இவ்விரண்டு பக்ஷத்தில் எது ஸத்தியமென்பதைச் சொல்லவேண்டும் என்று திருதராஷ்டிரர் கேட்டார். இந்த பூமியில் மனிதராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் மரணத்தைத் தாண்டமுடியுமா? முடியாதா? என்பதைப்பற்றித்தான் அவச்யம் விசாரிக்கவேண்டும். தேகமிறப்பதற்காகவே இருப்பதாகக் கூறுவோர் பலருண்டு. அது ஸரியில்லை. நாம் மரணத்தையடையாமலிருப்பதற்காகவே அஷ்டாங்க யோகம், ஞானம் முதலிய உபாயங்களை ஹிந்து சாஸ்திரங்கள் போதிக்கின்றன. சாந்தோக்யத்திலும் மரணத்தை அடையாமல் அமிருதராவதற்காக தேவாஸுரர்கள் வெகுகாலம் குருகுலவாஸம் செய்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் நாமும் மரணமேற்படாமலிருந்தால் தேவலை என்று ஆசைப்படுவதுண்டு. இவ்விதமே, திருதராஷ்டிரருக்கும் ஸனத்குமாரருடைய மிருத்யு இல்லை என்ற வார்த்தையைக் கேட்டதும் மிருத்யுவை ஒப்புக்கொண்டு அவனைத் தாண்டுவதற்காக வழிதேடுவதைக்காட்டிலும், மிருத்யுவே ஒருவனில்லை என்று ஒப்புக்கொள்வதுதான் சிலாக்யம் என நினைவு ஏற்பட்டது. ஆனால் மிருத்யு ஒருவனில்லையென்று ஒப்பினோமானால், தேவர்களும், அஸுரர்களும் மரணமிருப்பதாக நினைத்து அதைத்தாண்டுவதற்காக பிரும்மசர்யம் புரிவது ஏன்? அவன்தானில்லையே, ஆதலால் மிருத்யு இல்லை என்ற தங்களுடைய மதம் ஸரியா? அல்லது மிருத்யு உண்டு. ஆனால் முயற்சி மூலமாக அதைத் தாண்டவேண்டும் என்ற தேவாஸுர மதம் ஸரியா? என்று திருதராஷ்டிரர் ஸனத்குமாரரை வினவினர் என்பது கருத்து.

சுபம்.

V. J. S.

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஹூ ஆடி-மீ ௨௭௨

விக்கிரஹாராதனையின் விசேஷம்.

நாம் செய்துவருகின்ற விக்கிரஹாராதனையில் அறிய பல தத்துவங்களடங்கியிருக்கின்றன. உலக வியவஹாரங்களில் ஈடுப்பட்ட சாதாரண ஜனங்களின் மனம், பகவானிடத்தில் செல்ல வேண்டுமானால், முதலில் விக்கிரஹாராதனைதான் அவச்யமாகும், நமது சாஸ்திரங்களில் பகவானுக்கு லக்ஷணம் கூறும்பொழுது சச்சிதாநந்தஸ்வரூபியென்றும், ஸிருஷ்டிஸ்தி ஸம்ஹாரகர்த்தாவென்றும், அங்கு, இங்கு எனாதபடி எங்கும்பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தவரென்றும், நாமரூப மற்றவர் என்றும். சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட பகவானு உடைய ஸ்வரூபத்தை உத்தமாதிகாரிகளாகிய யோகிகளைத்தவிற மற்ற ஸாதாரண ஜனங்களால் உபாஸனைபுறிய ஒருபோதும் ஸாத்தியமில்லை. யோகிகளின் மனது பக்வமாயிருப்பதுபோல் யாவ குருக்ம் அவ்விதமிருக்கமுடியாதல்லவா? ஆகவே ஸாதாரண ஜனங்களுக்குங்கூட, ஸூக்ஷ்மமான பரம்பொருளில் மனம், நிலைத்து நிற்பதற்காக, முதலில் ஸ்தூலவடிவமாயுள்ள விக்கிரஹங்களில், அதை முதலில் நிலைக்கும்படி செய்து பழகிவருவதுதான் விக்கிரஹாராதனையின் நோக்கம், சூக்ஷ்மவஸ்துக்களில் மனதை செலுத்தி தியானிக்கமுடியாதவர்கள், ஸ்துலமாயுள்ள பஞ்சபூதங்களில் பகவானைப் பாவித்துப்பிறகு, ஸூக்ஷ்மத்தில் செலுத்துவது பொருத்தமேயாகும்.

நமது மனமானது ஏகாக்ரதையை யடைந்தாலன்றி, பகவானைக்கண்டறிதல் இயலாது. அதை ஒரு விக்கிரஹத்தின் மூலமாகத்தான் நாம் ஒருமுகப்படுத்தவேண்டும், நமது புத்தி ஏகாக்கிரப்பட்டால் நாம் எல்லா புருஷார்த்தங்களையும் எளிதிலடைந்துவிடலாம். இந்த தத்வமறியாமல், பிற மதத்தினரும், ஹிந்துமதத்

தினரும், விககிரஹாராதனையை விசேஷமாய்க் கண்டனஞ்செய்கின்றனர். "விக்கிரஹம் பகவானில்லை" என்ற விஷயம் நமக்குத் தெரியாமலில்லை விக்கிரஹத்தில், பகவானை, பாவனை செய்வது. குற்றமில்தாததே, இவ்வுலகமெல்லாம் பகவானுடைய சரீரமாதலால், சிலையில் பகவானைப்பூஜிப்பது சாஸ்திரீயந்தான். பகவானுடைய சரீரத்தில், எந்த பாகத்தைப் பூஜித்தாலும், அது பகவது பாஸனையேயாகும்.

நமது விக்கிரஹாராதனையைப் பழிக்கின்ற கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களுங்கூட, விக்கிரஹங்களைப்பூஜித்து வணங்குபவர்களேயாவர். இவ்வுண்மை அவர்களுடைய மதக்கிரந்தங்களினின்றும் நன்ருய் அறியப்படுகின்றது.

பைபிளில் பலவிடங்களில், "தேவன்பார்த்தான், தேவன் விரலால் எழுதினுன், தேவன் நடந்தான், தேவன் சிம்மாசனத்தில் தேவதூதர் வணங்கத்தக்கவண்ணம் எழுந்தருளியிருக்கிருன், தேவன் பிரத்தியக்ஷமானுன்" என்று பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்தவத்தெய்வத்திற்கும். மனிதனைப்போன்ற அவயவங்கள் உண்டென்றுத் தெளிவாய்த்தெரிகின்றது,

விக்கிரஹாரா தனை அவசியமில்லையென்ருல்,கிறிஸ்தவன்,என்? சிலுவையை, தியானஞ்செய்யவேண்டும்? அதை என் கழுத்திலும் அணிந்துகொள்ளவேண்டும், ஏசுவுக்கு வருஷந்தோறும் உத்ஸவம் முதலியன என் நடத்தவேண்டும்? என் சர்ச்சுக்குப்போகவேண்டும். சர்சில் எண்ணிறைந்தப் பிரதிமைகள் காணப்படுவானேன்?

அப்படியே, மகம்மதியரிள் மதத்திலும் விக்கிரஹாராதனை இல்லாமலில்லை. அவர்களுக்கும் ஆலயம், உத்ஸவம் முதலியயாவுமுண்டு, ஆகையால் ஹிந்துக்களின்விக்கிரஹாராதனையைகுறைவுப்படுத்திச்சொல்வதும், எழுதுவதும் ஸரியாகமாட்டாது அன்றியும் அவர்களுக்கும், நமக்கும்,விக்கிரஹாராதனையில் வித்தியாஸமொன்று உண்டு. அதென்னவென்ருல், மற்றமதஸ்தர்கள்,விக்கிரஹாராதனை கோவில், முதலிய விஷயங்களிலேயே, முடிவடைந்து விடுகிருர்கள், அதற்கு மேற்பட்டது அவர்களுக்கு ஒன்றுமில்லை, நமக்கோவென்ருல், தேவதா விக்கிரஹங்களும், தேவாலயங்களும், பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தை விரும்பியுள்ள பக்தகோடிகளுக்கு

பிரும்மானந்தத்தை அனுபவிக்கும்படி செய்யத்தக்க ஒரு ஸாதனமேயாகும், நாம் நாடும் உத்தமநிலேயே இதல்ல. இது உத்தம நிலையைக்குறித்துள்ள ஒருபடியாகும், அகண்ட பரிபூர்ணமாய் உள்ள பரம்பொருளை ப்ரத்தியக்ஷமாய் அறிவதற்கும், நினைப்பதற்கும், சொல்வதற்கும், நம்மனதிற்கு கோசரமாயுள்ள கண்ட (சிறிய) வஸ்துவின் உதவியின்றி முடியாது. நாமரூபமுள்ள விஷயத்தில் நம்மனம் பற்றுதல் சிரமமுமில்லாதது. ஆகவே இந்த விக்கிரஹாராதனையின் மூலமாக, அகண்டவஸ்து ஸாக்ஷாத்காரத்தையடைந்து முக்தனுப் விளங்குவதுதான் ஆர்யர்களின் உத்தம நிலையாதலால், விக்கிரஹாராதனை முடிவு நிலையல்ல. இந்நிலையடையாதவரையில், விக்கிரஹாராதனையை அவச்யம் அனுஷ்டித்தேதீரவேண்டும். இவ்வுத்தம பதவியையடைந்தவரும், தங்களுக்கு இது அனுவச்யம் என்றகாரணத்தினுல்,இதைத் தப்புவழி என்று நிந்தை செய்யாமல், பிறருக்காகவாவது தாமும் அனுஷ்டிக்கவேண்டியதுதான். இவ்விதமே தேவாலயங்களிலும்,சிரத்தை பக்தியுடன், பகவானைப் பூஜித்துவருவோமானுல், ஸகல அனர்த்தங்களும் விலகி, நன்மையே ஸித்திக்கும். தற்காலத்தில், நமது தேசத்திலுள்ள,தேவாலயங்களின் மஹிமையெல்லாம், சீர்குலைந்து போய்விட்டது. தேவாலயங்களைப்பற்றி ஒருவரும் கவனம் ஸரியானமுறையில் எடுத்துக்கொள்வதில்லை. அங்குள்ள பகவானுக்குப் பூஜாதிகளும் ஸரிவர நடப்பதில்லை, அவற்றின் சீர்திருத்த விஷயத்தில், தர்மகர்த்தர்களும், கிராமத்தாரும் கொஞ்சங்கூட முயற்சியெடுத்துக்கொள்வதில்லை. நாம் மற்ற மதவிஷயங்களில் மோசம்போனது போலவே, தேவாலய சீர்திருத்த விஷயத்திலும் கவனியாமல் மோசம்போய்விட்டோம். இதனுலேயே சட்டமும் நுழையும்படி செய்துகொண்டுவிட்டோம்.

ஆதிகாலத்தில் அரசர்களே நமது தேவாலயங்களைத் தர்மசிந்தனையுடன் பாதுகாத்துவந்தார்கள். அப்போது ஜனங்களுக்கும் அரசனைப்போல், தேவாலயபக்தி வேரூன்றி விளங்கிவந்தது. தற்காலத்தில் தர்மகார்யங்களை அன்போடு நிர்வாகம்செய்பவரைப் பார்க்கவேண்டுமானுல், நகரத்தாரிடம் காணலாம். முன் அரசர்களால் செய்யப்பட்ட தேவாலய காரியங்களை இவர்கள் கூடிய வரையில் நிறைவேற்றிவருகிறுர்கள், ஆதலால் இவர்களை தார்மிகர்களென்று வாழ்த்தாமலிருக்க மனம் வரவில்லை.

प्रतिष्ठया सार्वभौमं सद्मना भुवनत्रयम् ।
पूजादिना ब्रह्मलोकं त्रिभिर्मत्समतामितात् ॥

என்று நமது சாஸ்திரங்கள் தேவாலயங் கட்டுவோர் சக்ரவர்த்தியாவரென்றும், தேவாலயத்தைச் செப்பனிடுவோர் மூவுலகிலும் மஹிமையடைவரென்றும், தேவாலயத்திலுள்ள விக்கிரகங்களைப் பூஜிப்பவர் பிரும்மலோகஞ் செல்வரென்றும், தேவாலயம் கட்டி அது சிதைந்த ஸமயத்தில் அதைச் செப்பனிட்டுத் தமது கையினுல் பகவானைப் பூஜித்தலென்ற மூன்றையும் செய்தவர் பகவானுக்குச் சமமானவர் என்றும், தேவாலயகாரியத்தைப் போற்றுகின்றன.

ஆதலால் நகரத்தாரைப் பார்த்தாவது நாமும் விசேஷ அன்பு செலுத்தி தேவாலயங்களைக் கவனிக்க முன்வரவேண்டும். அதனுல் பகவானிடம் நமக்கும் பக்தி ஸித்தி ஏற்பட்டுவிடும்.

நம் தேசத்தில் பல சிவாலயங்களும், பல விஷ்ணு ஆலயங்களுமுள. இவற்றுள் பேதபுத்தி சிறிதளவும் நமக்குக் கூடாது. எவரெவருக்கு எந்த தெய்வத்தை ஆராதிப்பதற்கு ஆவல் இருக்கின்றதோ அவரவர் அந்தத் தெய்வத்தை ஆராதித்து நன்மை பெறுவது உத்தம மார்க்கம்,

ஆதலால் பகவானிடத்தில் பேதபாவனையை விலக்கி அபேத பாவனையுடன்

आदित्यमंबिकां विष्णुं गणनाथं महेश्वरम् ।
पञ्च देवान् स्मरेन्नित्यं महापातकाशनम् ॥

என்ற சாஸ்திரபிரகாரமாக சிவன், விஷ்ணு, சக்தி, கணேசர், சூரியன் என்ற ஐந்து தெய்வங்களையும் பூஜித்துவருவோமானுல் நமது ஆர்யமதத்தின்ஒருபாகமாகியபக்திமார்க்கத்தை அனுஷ்டித்தவர்களாவோமென்பதில் ஐயமில்லை. சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

தஞ்சைஜில்லா பிராம்மண மஹாஸபை,

இச்சபையினுதரவின் கீழ், இவ்வூர் கீழ டபேர்ப்படித்துறையில், சிலநாட்களாக, அக்னிஹோத்திரம், தாததேசிகதாதாசார்ய ஸ்வாமிகளவர்களால், ஆபஸ்தம்ப தர்மஸூத்திரமென்னும் கிரந்தமானது அழகாக உபன்யஸிக்கப்பட்டு வருகின்றது, இவ்வூரில் உள்ள பல வித்வான்களும், தனவான்களும், மற்றுமுள்ள வைதிகசிரோமணிகளும், அவ்வுபன்யாஸத்தைச் சிரவணம், செய்து வருகின்றனர். தற்காலத்தில் நமது வைதிகமதம் நாளுக்குநாள் க்ஷீணதசையடைந்து மறைந்து போனதற்கெல்லாம், அதை ஸரியானபடி ஜனங்களுக்கு எடுத்துபதேசிக்குந் திறமைவாய்ந்த பண்டிதர்கள் மறைந்துகொண்டிருப்பதுதானுகும். ஆகவே வித்வான்களெல்லோரும், தம்மிடமுள்ள ஞானத்தை ஸாதாரண ஜனங்களும் அடையும்படி பஹிரங்கமாய்ப் பிரஸங்கம் செய்ய வேண்டும். பூர்வகாலத்தில், நமது முன்னோர்கள் வெகு சிரமப் பட்டுக்கொண்டாவது மதத்தையும், மத கிரந்தங்களையும் காப்பாற்றி வைத்திருந்ததாலன்றோ, இப்போது நாம் தலைநிமிர்ந்து நடக்கின்றோம்.

நாம் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், முதலிய வெவ்வேறு ஸித்தாந்தங்களை மோக்ஷமார்க்கத்தில் மட்டிலுமங்கீகரிக்கின்றோமேயன்றி, தர்மமார்க்கத்தில் அல்ல. வர்ணாச்ரம தர்மமார்க்கமானது, எல்லோருக்கும் பொதுவானதேயாகும். நம் மெல்லோருக்கும் பொதுவாயுள்ள விஷயங்களில், ஒற்றுமை அடைந்து, மதத்தைக் குறித்து வேலைசெய்து வருவோமானல், மதாபிவிருத்தி ஏற்படுவதுடன், அதையடுத்தே, ராஜாங்கத்திலும் இன்னும் பல விஷயங்களிலும் நமக்கிருக்குங் குறைகளெல்லாம் சீர்திருத்தமடைந்துவிடும்.

ஆனல், மகரிஷி வம்சத்தியவராகிய நமக்கு நமது, மதமும் அதன் பிரமாணமும், உபன்யாஸ மூலமாக அறிந்துகொள்ளும்படி நேரிட்டுவிட்டதே.

ब्राह्मणोजायमानो हि पृथिव्यामधि जायते ।
ईश्वरस्सर्वभूतानां धर्मकोशस्य गुप्तये ॥

என்று மனு சொன்னப் பிரகாரமாக முன்னோர்களிடமிருந்து நமக்குக் குலதனமாய்க் கிடைத்திருக்கும் மதமாகிய நிதியைக் கார்க்கும்பொருட்டு இப் புண்யபூமியில் பிறந்த பிராம்மணர்களிடம் நமது மதஸ்வரூபத்தையறிந்துகொண்டாலும் ஸரியாயிருக்கும். இதன்றி மகம்மதியரிடமும், கிரிஸ்தவர்களிடமும், மற்றுஞ்சில சீர்திருத்த சங்கத்தார்களிடமும் மதத்தை நாமறிந்து கொள்ளவேண்டிய நிலையில் ஆகிவிட்டோமே என்ற வருத்தம் தாங்கமுடியாமலிருக்கிறது.

இவ்வித விபரீத ஸம்பவங்களுக்கெல்லாம் நமது அக்ஞான நித்திரைதான் காரணமாகும். வைதிகமத ஹிதசத்துருவாயுள்ள சங்கத்தாருக்கு நமது மதத்தைப் பற்றி தூஷணைபுரிவதுமட்டிலும் தெரியுமேயன்றி வேறொன்றும் தெரியாது. நம்மைச் சுற்றிலும் வர்ணாசிரம தர்ம விரோதிகளாய பல சங்கங்கள் சூழ்ந்துகொண்டு நம்மை நாசஞ்செய்வதிலேயே நோக்கங்கொண்டிருப்பதால் நாமும் அதற்குத் தக்கபடி முன்ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். இன்றேல் நமது மதம் கூடியசீக்கிரம் இருந்தவிடம் தெரியாமல் போய்விடும்.

ஆகவே இந்த ஸபையின் கிளைகளாயுள்ள சபைகளிலும், அனுஷ்டான சீலர்களாயும்,வித்வான்களாயும் அங்கங்கே விளங்கி வரும் ஆஸ்திகர்களைக்கொண்டு அடிக்கடி மதப் பிரசாரஞ்செய்து வரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

கூடியவரையில் பிராமணரல்லாத வகுப்பினரிடம் அன்பு செலுத்தி அவர்களின் அபிவிருத்திமார்க்கத்தையும் உபதேசித்து வருவதுதான் உசிதமாகும். இதுவரையில் பிராம்மணர்களாகிய நம்மிடம் அவ் வகுப்பினர் செலுத்திவந்த த்வேஷ பாவனையை விருத்தியாகாமல் தடுப்பதற்கு இதுதான் முக்கியமாகும். அவர்கள் அறியாமையால் எவ்வளவுதூரம் நம்மை வசைமொழிகளால் நிந்தித்தபோதிலும், நாம் அவர்களை இழிவுபடுத்திக் கூறுவது அழகல்ல. அவர்கள் நம்மை வீண் அகம்பாவம்படைத்தவரென்றும், தாமறிந்ததைப் பிறர் அறியவொட்டாமல் மறைத்து வைத்துப் பாதுகாப்பதில் வெகு ஜாக்கிரதையுள்ளவரென்றும், தங்களைத் தவிர சாஸ்திர நுட்பங்களை அறிந்தவர் வேறொருவருமில்லையென்றும், குறுகின மனோபாவமுள்ளவர்களென்றும், இந்தியாவிலுள்ள

ஜனங்கள் விஷயத்திலேயே, இப்படி இருப்பார்களானால், பிற நாட்டார் விஷயத்தில்கேட்கவும்வேண்டுமா என்றும் பலவாறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சாஸ்திரீய முறையில் அவர்களுடைய குறைவுகளைநீக்கவேண்டியது நமது கடைமையே ஆகும். நாம் அவ்வகுப்பினரின் ஒற்றுமையை அடையாமலிருந்தால், உட்கலகங்கள் அதிகரிப்பதுமன்றி, நமது ஸபையின் உத்தேசமும் நிறைவேறமாட்டாது. ஆதலால் நமக்கு அவர்களிடம் அபிமானம்வேண்டும். நாம் அவர்களை அபிமானிக்காமல் தாழ்மைப்படுத்தும் பட்சத்தில், அனேக அனர்த்தங்களையடையும்படி நேரிடுமோ? என்று என் சிற்றறிவில் புலப்படுகின்றது. எவருக்குப் பிராம்மணருடன் கலந்துகொண்டு ஒத்து வாழ்வதற்கு அபிப்பிராயமில்லையோ, அவர்களையும் அன்புடன் அழைத்து திருப்புவதற்கு வழி தேடிப்பார்ப்போம், அதுவும் முடியாமற் போனால், உதாஸீன பாவத்துடன் அவர்களிடம் நடந்து கொள்வதுதான் நலம்.

वय्यं पञ्चोत्तरंशतं என்ற நியாயப்படி வகுப்புத்வேஷமின்றி வகுப்பு பேதத்தை, மட்டிலும் ஒப்புக்கொண்டு. பிறமதம் நம நாட்டில் புகாமல் ஏற்பாடு செய்யவேண்டும். இது அஸாத்தியமாகத்தோன்றினாலும், ஸாத்தியமானவரையில், செய்யத்தான் வேண்டும்.

இதன்றி, நமது மத தத்துவங்களையெல்லாம் வித்யாப்யாஸத்தின் மூலமாகத்தான் அறிந்துகொள்ளவேண்டுமாதலால், சிறப்புப் பொருந்திய ஸம்ஸ்கிருதபாஷையை எல்லோரும்படித்து வித்வான்களாகவேண்டும். தற்காலத்திய வித்யாப்யாஸத்தால், முதலாவது தகப்பன் மூடர்களென்றும், வேதம் முதலியவையெல்லாம், வயிற்றுப்பிழைப்பிற்காக, வஞ்சகர்களாகிய சில வைதிகர்களால் கற்பிக்கப்பட்டனவென்றும், மாணவர்களுக்குப் புத்தி உண்டாகிறதேயன்றி, அதனால் யாதொரு புருஷார்த்தமேற்படுவதில்லையென்பது யாவருமறிந்ததே. ஆகவே நமது புராதந வித்யாப்யாஸாபிவிருத்தியின்பொருட்டு, கிராமங் கிராமமாய் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும். இவ்வாறே விவசாயம், வியாபாரம் கைத்தொழில், இவைகளையும் அபிவிருத்திசெய்யவேண்டும், இதன்றி, எல்லோரும் ஒரே படிப்பைப் படித்துவிட்டு, உத்தியோகத்திற்குத் திண்டாடிக்கொண்டிருப்பது அனுசிதம்.

இக் காரியங்களையெல்லாம் நன்றாய் நடத்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட ஸபைகள் நமக்குத் தேவை. ஒரு காரியத்தையும் ஆரம்பம் செய்யாத ஸபை எவ்வளவு இருந்தாலும் பிரயோஜனமில்லை. ஸ்ரீமான் தாததேசிக தாதாசார்ய ஸ்வாமிகளைப்போல் மற்ற வித்வான்களும் சுயநலங்கருதாமல் நமது சாஸ்திரங்களின் ரஹஸ்யங்களை கிராமந்தோறும் நகரந்தோறும் உபதேசித்துப் பொதுஜன நன்மைக்குப் பாடுபடும்படி செய்யவேண்டுமாறு ஷை ஸபாத்தியக்ஷர்களை ஆஸ்திகர் அனைவரும் பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

சுபம். V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

உபாகர்ம காலநிர்ணயம்.

நாளது ஆங்கீரஸ வருஷத்தில் பஞ்சாங்கங்களின் வேறுபாட்டால் யாஜுஷோபாகர்மாவை எந்த தினத்தில் செய்வது என்கிற ஸம்சயம் பலபேருக்கு உண்டாயிருக்கிறது. ஆவணிமீ 30-வது தேதியன்றே யாஜுஷர்கள் பிரதமம், த்விதீயாதி என்கிறபேதமில்லாமல் எல்லா உபாகர்மாவை (ஆவணியாவிட்டத்தைச்) செய்ய வேண்டும், உபாகர்மாவுக்கு முக்யகாலமாக விதிக்கப்பட்ட ச்ராவணீ பூர்ணிமையாகிய ஆவணிமீ 1௨ ஸங்கிரமணம் (மாதப் பிறப்பு) வருகிறபடியால் அந்த தினம் ஸங்கிரமணம் என்கிற தோஷம் துஷ்டமானபடியால் அன்றைய்தினம் உபாகர்மாவைச் செய்யக்கூடாது—என்று அனேகம் வித்வான்கள் பிரசுரப்படுத்தியிருக்கிறார்கள்.

யாஜுஷர்கள் பிரதமோபாகர்மாவைமாத்திரம் ஆவணிமீ 30௨. செய்யவேண்டியது. த்விதீயாதி உபாகர்மாக்களை ஆவணிமீ 1-வது தேதியிலேயே செய்யவேண்டியது. இப்படிச்செய்வது தான் சாஸ்திர ஸம்மதமென்றும், முன்னோர்களின் பழமையான ஆசாரத்திற்கு ஒத்ததென்றும், பண்டித சிகாமணிகளான பல பெரியோர்களின் கொள்கை.

பொதுவாக யாஜுஷோபாகர்மாவைச் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட காலம் ச்ராவணீ பூர்ணிமை. அதாவது,

ஆவணி மாதத்திய அமாவாஸைக்கு முன்புவரும் பூர்ணிமை. அதற்கு ஏதாவது தோஷங்கள் ஏற்பட்டால் பிரௌஷ்டபதியிலும் அதற்கு தோஷம் ஏற்பட்டால் ஆஷாடியிலும் யாஜுஷோபாகர்மாவைச் செய்யவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. தோஷங்களாவன.- ஸங்கிரமணம், கிரஹணம், சுக்ராஸ்தமனம். அதிமாஸம், மலமாஸம் முதலியன. ஸங்கிரமணம், கிரஹணம் இந்த இரண்டும் அர்த்தராத்திரிக்குப் பின்பு நேர்ந்தால் தோஷமில்லை. அர்த்தராத்திரிக்கு முன்பு வந்தால்தான் தோஷம். தோஷங்கள் பிரதமோபாகர்மாவுக்குமாத்திரம் பார்க்கவேண்டியதா? அல்லது மற்ற த்விதீயாதி உபாகர்மாவுக்கும் பார்க்கவேண்டியதா? என்று விசாரித்தால் எல்லா உபாகர்மாவையும் தோஷமில்லாத காலத்திலேயே செய்யவேண்டுமென்று தத்காலத்தில் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். தோஷமில்லாதகாலத்தில் பிரதமோபாகர்மாவைமாத்திரந்தான் செய்யவேண்டியது. மற்ற உபாகர்மாக்களுக்கு தோஷத்தைப் பார்க்கவேண்டியதேயில்லை என்பதுதான் சாஸ்திரஸம்மதமென்னும் முன்னோர்களின் அநுஷ்டானத்துக்கும் ஒத்தது என்றும் பலரின் அபிப்ராயம்.

ஸ்மிருதி கௌமுதீ என்னும் கிரந்தத்தில் இவ் விஷயம் வசனபூர்வமாய் வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. —

स्मृत्यन्तरे— संक्रान्तौग्रहणे चैव मौड्ये च गुरुशुक्रयोः । उपाकर्म न कर्तव्यं परतश्चेन्नदोषभाक् इति । सिद्धार्कादिसर्वाण्येतानि वचनानि नवोपनीतविषयाणि— "प्रथमोपाकृतिर्नस्यात् कृतं कर्म विनाशकृत् । प्रत्यब्दिकं तु यत् कर्म क्रियमाणं न दुष्यति" इति वचनात् ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது — "குரு சுக்ரமௌட்யாதிகாலங்களில் உபாகர்மாவைச் செய்யக்கூடாதென்கிற இவ் வசநங்கள் புதிதாய் உபநயநம் பண்ணினவனைப்பற்றிச்சொன்ன விஷயங்கள், (பிரதமோபாகர்மாவைப் பற்றினவைகள்.) "பிரதமோபாகர்மாவைச் செய்யக்கூடாது, செய்தால் விநாசத்தைச் செய்யும். வருஷம்தோறும் செய்யும் கர்மாவுக்குத் தோஷமில்லை என்று கருத்துள்ள வசநமிருப்பதால்" என்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே ஸ்மிருதிஸார ஸமுச்சயத்திலும் சொல்லியிருக்கிறது. தர்மஸிந்து, நிர்ணயஸிந்து, ஸ்மிருதி சந்திரிகை முதலான கிரந்தங்களிலும் இவ்விஷயம் நன்றாய்ச்

சொல்லப்பட்டிருக்கிறதை மேலே காண்பிப்போம். வைதிக ஸார்வபௌமர் என்ற தோழப்பர் தசநிர்ணயியிலும் கண்ட பூஷணத்திலும் தோஷங்களெல்லாம் பிரதமோபகர்மாவுக்கேதவிர மற்றவைகளுக்கில்லையென்று, ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"ग्रह: ग्रहणं अत्र ग्रहणसंक्रमण वर्जनस्मरणं प्रथमोपाकर्मविषयम् तथावक्ष्यते ।"

"अत: प्रथमेतरोपाकरणे न दोषगन्ध:। तथा स्मृत्यन्तर वचनानि—
यज्ञोपवीतं कर्तव्यं श्रावणे गुरुशुक्रयो: ।
बाल्येमौढ्येऽपि वार्द्धक्ये कर्तव्यं नित्यकर्मवत् ॥
श्रावणी पूर्णिमायत्र ग्रहसंक्रान्तिदूषिता ।
स्वाध्यायस्य प्रधानत्वान्नित्यत्वाच्छ्रावणस्य च ॥
अञ्जसा श्रावणं विप्रै: कर्तव्यं नित्यकर्मवत् ।
ग्रहसंक्रान्तयोश्शूलं श्रावणस्य नविद्यते ।
पौर्णमास्यास्तु नित्यत्वादापस्तम्बस्य शासनात् ।
अञ्जसा श्रावणं विप्रै: कर्तव्यं नित्यकर्मवत् "।
"आशौचं सर्वविषयं अन्यत् प्रथमोपाकर्म विषयम् "

"अतो दोषसंभवे श्रावणी निषेध: कालान्तर विधानं च प्रथमोपाकर्मविषयमिति सिद्धम्।"

வைதிகஸார்வபௌமர் சொல்லியது தமது அபிப்ராயத்திற்கு ஒத்து வாராததாயிருந்தால், அதைப் பிரமாண யுக்திகளுடன தூஷித்துவரும் வைத்தியநாததீக்ஷிதர் அவர்கள், உபாகர்மப் பிரகரணத்தில் தோஷப்பர் கண்டோக்தமாய்ச் சொன்னதை மறுக்காமல் அதையே எடுத்துக் காண்பித்திருப்பதிலிருந்தே அவாளது அபிப்ராயம் இன்னதென்பதை ஸுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். தீக்ஷிதாளுடைய உபாகர்மபிரகரணத்தை நன்றாய் ஊன்றிப்பார்த்தால் இந்த அபிப்ராயம்தான் தெளிவாய் ஏற்படுகிறது என்பதை மேலே விவரிப்போம்.

இவ்வருஷத்திய புதுக்கோட்டைப்பஞ்சாங்கம் 36-வது பக்கத்தில் எழுதியிருப்பதைக் கவனிக்கவும்.

"யஜுர் உபாகர்மவிஷயம், பிரதமோபாகர்மாவுக்குத்தான் கிரஹமௌட்யாதி தோஷங்கள் வர்ஜ்யமென்றும், த்விதீயாதி

உபாகர்ம எக்காலத்திலும் எந்த தோஷத்தையும் கவனிக்காமல் சிராவண பூர்ணிமையிலேயே அநுஷ்டிக்கவேண்டியதென்றும் வசன பூர்வமாக ஸித்தாந்தம் செய்து ஏற்கனவே ராக்ஷஸ வருஷத்திய பஞ்சாங்கத்தில்பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒத்தே இந்த பஞ்சாங்கத்தில் இதுவரை உபாகர்ம விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வருஷத்தில் ஸங்கிரமணதோஷத்தால் பிரதமோபாகர்ம போதாயினிகளுக்கு ஆஷாட பூர்ணிமையிலும், ஆபஸ்தம்பிகளுக்கு பாத்ர பூர்ணிமையிலும் அநுஷ்டிக்கத்தக்கவை.

ஆனல் த்விதியாதி உபாகர்மாவுக்கும் கிரஹமௌட்யாதி தோஷங்கள் பார்க்கவேண்டும் என்று சில வித்வான்கள் அபிப்ராயப்படுவதால் அப்படி அபிப்ராயப்படுகிறவர்கள் த்விதீயாதி உபாகர்மாவைப் பிரதமோபாகர்மத்திலேயே அநுஷ்டிக்கலாம்." இதனல் பிராசீநர்களின் அபிப்ராயம் தெளிவாய்விளங்குகிறது.

இன்னும், சென்ற பாரபவ-ஹூ ஆடிமீ முதல் தேதியில் திருவனந்தபுரம் தீக்ஷிதர்தெரு சங்கராயண ஸோமயாஜியளும், ஷியூர் மேலத் தெரு திருநெல்வேலி ஸேனபதிகனபாடிகளும் எழுதி வெளிப்படுத்திய உபாகர்ம கால நிர்ணய பத்திரிகையைப் பார்த்தால் முன்னேர்களின் ஆசாரமும், அபிப்பிராயமும் செவ்வனே வெளியாகிறது. அதில் பிரதமோபாகர்மாவுக்குத்தான் தோஷங்கள் வர்ஜ்யங்கள், மற்றதைத்தோஷமுள்ளகாலத்திலேயே செய்யவேண்டியது என்பதை ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த பத்ரிகையை அப்படியே இதன் அடியில் வெளியிடப்படுகிறது.

(உபாகர்ம கால நிர்ணய பத்திரிகை.)

நாளது வருஷம் (பாரபவ) ஆடிமீ 20உ ஸ்திரவாரம் சிராவண பூர்ணமையில் செய்யவேண்டிய ருக் யஜுருபாகர்மத்தைச் சந்திரகிரஹணம் வருவதால் ஆவணிமீ பூர்ணிமையில் உபாகர்மா செய்யவேணுமென்று சில ஜனங்களுக்கேற்பட்ட ஸந்தேஹத்தை நிவிருத்திசெய்வதற்காக இந்தப் பத்திரிகை எழுதப்படுகிறது.

இப்போது பஞ்சாங்க கணகர்கள் பலவிதமாய் ஏற்பட்டு சாஸ்திரமார்க்கம் தவறி அவரவர்களிஷ்டப்படி கணித்து கர்மகாலத்தைப் பேதப்படுத்துவதும்தவிர விதாயக விஷயமாய் அவர்களும் நம்முடைய பூர்வீகர்களும் கழிந்த வருஷங்களில் சாஸ்திர

நிர்ணயம் செய்து அவரவர் பஞ்சாங்கங்களில் பிரதமோபாகர்மம் தவிர மற்ற உபாகர்மங்கள் தோஷ யுக்த சிராவணபூர்ணிமையிலேயே போடப்பட்டும், அப்படியே நம்முடைய பெரியோர்கள் அநுஷ்டிக்கப்பட்டுமிருக்க இந்த வருஷத்தில் சில கணகர்கள் பாத்திரபதத்தில் உபாகர்மம்போட்டு கர்மகாலத்தைப் பேதப் படுத்திபிருக்கிறார்கள். இதில் நாம் ஆலோசிக்கவேண்டியதாவது. இதற்குமுன் இவ்விதம் சம்பவித்தகாலங்களில் நம்முடைய முன்னோர்கள் எவ்விதம் நிர்ணயம்செய் து அநுஷ்டானம்பண்ணியிருக்கிறார்கள். அந்தந்த காலத்திலுள்ள பஞ்சாங்கங்களில் எவ்விதம் போடப்பட்டிருக்கிறதென்பது முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய காரியம். முன்னிருந்த விதாயகர்களுக்கு விதாயக விஷயத்தில் அவ்வளவு சக்தி போராதென்றுலகுவாய்ச்சொல்லமுடியாது. அப்படிச் சொல்வது இப்போதிருக்கிற பெரியோர்களிடத்தில் கொஞ்சமும் பிரயோஜனத்தை அடையமாட்டாது. தவிறவும் அப்படிச் சொல்லப்பட்டவர்களுக்கே கவுரக்குறை வுவரும். அப்பால் கழிந்த வருஷங்களில் இப்படி தோஷம் வந்தகாலங்களில் பஞ்சாங்கங்களில் எப்படி போட்டிருக்கிறார்கள் என்பதையும் பெரியோர்கள் அநுஷ்டானத்தையும் கவனிப்போம். இதற்கு 47-வருஷங்களுக்கு முன் ஸித்தார்த்திஸு ஆடிமீ 30உ சிராவண பூர்ணிமையில் கிரஸ்தோதய சந்திர கிரஹணம். அந்தக் காலத்திலுள்ள பஞ்சாங்கங்களில் பிரதமோபாகர்மம் தவிற மற்ற உபாகர்மங்கள் செய்யவேணுமென்று போடப்பட்டிருக்கிறது. அப்போது திருவனந்தபுரம் மஹாராஜா ஸ்தானத்தில் மகாராஜ குருவாயிருந்த தீக்ஷிதரவர்கள் அவாளுடைய புத்திராளாயும், இப்போது மஹாராஜ குருவாயுமிருக்கிற பிரும்மஸ்ரீ அனந்தகிருஷ்ண தீக்ஷிதரவர்களுக்கு பிரதமோபாகர்மம் மாத்திச்செய்திருப்பதாயும் மத்த உபாகர்மம் சிராவணத்திலேயே செய்திருப்பதாயும்தெளிவாய்ச்சொல்லுகிறார்கள். அந்தகாலத்தில் மகாராஜாஸ்தானத்தில் சதுச்சாஸ்திர பண்டிதராயிருந்தபிரம்மஸ்ரீ அனந்தராமசாஸ்திரியள் பிரும்மஸ்ரீ திருவிசநல்லூர் ராமஸ்வாமி சாஸ்திரியள் பிரும்மஸ்ரீ கடயம் ஸுப்பாதீக்ஷிதர்வாள் பிரும்மஸ்ரீ கல்லிடைக்குறிச்சி சாஸ்திரி தீக்ஷிதர்வாள் பிர்ம்மஸ்ரீ சக்திதீக்ஷிதர்வாள் இப்போது ஸ்ரீ சிருங்கேரியில் ஸ்ரீஜகத்குருவாயிருக்கிறஸ்ரீசங்காசாரிய பாதாளவர்கள் பிதா பிரும்மஸ்ரீ மைசூர் ராமாசாஸ்திரியளவர்கள் முத

லான அனேக சதுச்சாஸ்திர பண்டிதாளிருந்து வைத்தியநாத தீக்ஷிதீயம் முதலான ஸ்மிருதிகளை நன்றாய் பரியாலோசனைசெய்து அந்தந்த தேசங்களில் விதித்து நடத்தப்பட்டுமிருக்கிறது. இவர்களுக்கெல்லாம் ஒன்றும் தெரியாதென்று சொல்வது ஈசுவர கோபத்திற்கு இடமாகும். தவிரவும் அந்த பெரியோர்கள் கர்மச் சாரத்தாளுக்களாயும் பாப பீருக்களாயுமிருந்து आलोच्य सर्वशास्त्राणि என்ற விதத்தில் நன்றாய் ஆலோசித்துச் செய்தவர்கள். இப்படியே அனேக கதவருஷங்களில் ஏற்பட்ட விஷயங்களைச் சுருக்கமாய் எடுத்துக்காண்பிக்கிறோம். அவைகளை ஸாது ஜனங்கள் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேணுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது—.

ரௌத்ரி-௵ ஆடி-௴ ககூஉ புதவாரம் சிராவண பூர்ணிமையில் ராத்திரி கூ உடு க்கு கிரஹணஸ்பிர்சகாலம் குருவுக்கு அஸ்தமனமும் சுக்கிரனுக்கு பாலத்வமும் ஏற்பட்டிருந்தும் ருக்யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

ரக்தாக்ஷிவருஷம் ஆவணி-௴ 3௳ சுக்கிராஸ்தமனமிருந்தும், சிராவணத்தில் யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

பிரபவ-௵ ஆவணி-௴ 1௳ குருவாரம் பூர்ணிமை $26\frac{1}{2}$ ஸிம்ம ரஸி 23, 13, ஸங்கிரமதோஷமிருந்தும் உபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

ஆங்கீரஸ-௵ ஆவணி௳ 4௳ பூர்ணிமையில் சுக்கிராஸ்தமனமிருந்தும் யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

விக்கிரம-௵ ஆவணி-௴ 6௳ சுக்கிராஸ்தமனமிருந்தும் யஜுருபாகர்மமும் காயத்ரீ ஜபமும் போடப்பட்டிருக்கிறது.

தாரண-௵ ஆடி-௴ 2௳ குருவுக்கு அஸ்தமனமிருந்தும் ருக்யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

பார்த்திப-௵ ஆவணி-௴ 12௳ குருவுக்கு அஸ்தமனமிருந்தும் ருக்குபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

கர-௵ ஆவணி௴ 4௳ சுக்கிராஸ்தமனமிருந்தும் ருக்யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

ஜய-௵ ஆவணி-௴ 1௳ புதவாரம் ஸிம்மரவி 22-17, க்கு ஸங்கிரம தோஷமிருந்தும் ருகுபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

விகாரி-ஷூ ஆவணி-மீ 5உ சுக்ராஸ்தமனமிருந்தும் ருக் யஜுருபாகர்மம் போடப்பட்டிருக்கிறது.

இப்படியே அனேக சத வருஷங்களில் அந்தந்த காலங்களி லிருந்த பெரிய வித்வான்களுடன் கலந்து அந்தந்தகாலத்து பஞ் சாங்கங்களிலும் போட்டு அப்படியே ஸர்வ தேசங்களிலும் நிர் விவாதமாய் அநுஷ்டிக்கப்பட்டு மிருக்கிறது. தவிரவும் கா வருஷத்து சிராவண விஷயமாய் விசித்ரசதாவதான வித்வான் மணிமகா பாகவதகனபாடியள் பாளேகடேட் திருவாதி ஸம்ஸ்கிருத ஸ்கூல் ஹெட் பண்டிதர் லக்ஷ்மணாசாரியாவர்கள் ஜம்புநாத தீக்ஷிதாவர்கள் முதலான பல வித்வஜ்ஜனங்கள் சேர்ந்து 1891-ம் வருஷம் ஜூலைமீ 15உயிலும், ஷைமீ 19உயிலும் திரு வாதியில் மகாஸபை ஏற்படுத்தி அதில் 500-க்குமேல்பட்டு மஹா வித்வான்களும் சேர்ந்து சிராவணத்திலேயே த்விதீயாத்யுபா கர்மம் தீர்மானித்ததாய் நோட்டீஸ்கள் அச்சுப்போட்டு பிரஸித்தப் படுத்தியிருக்கிறார்கள்.

இன்னும் காவருஷம் ஆனி-மீ 17உயில் 28நெ. பஞ்சாங்கக் கணகான திருவாதி ஸ்வாமிநாதசாஸ்திரியளும் ஸம்ஸ்கிருதத்தில் நோட்டீஸ் அச்சுப்போட்டு பிரஸித்தப் படுத்தியிருக்கிறார்.

விகாரி-ஷூ சிராவண விஷயமாய் கானடிகாத்தான் வி.துரை ஸ்வாமி சாஸ்திரியள் கீழாநிலை. பாஷ்யம் அ, ராகவாசார்முதலான மஹாவித்வான்களும் ஸம்ஸ்கிருதத்தில் நோட்டீஸ் அச்சுப்போட்டு பிரஸித்தப்படுத்தியிருக்கிறார்கள்.

அப்படியே 28நெ. பஞ்சாங்ககணகர் ஸ்வாமிநாதசாஸ்திரி யளும் 1899 வருஷம் ஜூலை-மீ 18உ திருவாதியில் அனேக வித்வான்களுடன் ஸபைசேர்த்து அதில் தான் ஒரு மெம்பாகவு மிருந்து சிராவணத் திலேயேஉபாகர்மம் தீர்மானித்ததாக அச்சுப் போட்ட தமிழ்நோட்டீஸினால் தெரியவருகிறது.

அப்படியே காவருஷம் விகாரி வருஷங்களில் திருநெல்வேலி ராமலிங்க ஜோஸியர் பஞ்சாங்கத்திலும் ராமநாதபுரம் பஞ்சாங்கத் திலும் சிராவணத்திலேயே உபாக்கர்மம் போடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஷை 28நம்பர் பஞ்சாங்ககணரும் ஷை ராமலிங்க ஜோஸியர் புத்திரர் குருநாத சாஸ்திரி என்பவரும் நாளது ஷூத் தில் பாத்திரபதத்தில் உபாகர்மம் என்று மாத்தி போட்டிருக்

கிறார்கள். இதில் 28-ம் நெம்பர் பஞ்சாங்க கணகர் காயத்ரீ ஜபத்தையும் மாத்திப்போட்டிருக்கிறார். பிதா புத்திராளுக்குள்ளேயே இப்படி பேதம் வந்ததற்கும், 28-ம் நெம்பர் பஞ்சாங்க கணகரும் திடீரென்று இப்படி மாத்திப் போட்டதற்கும் கால மஹிமையே தவிர வேறேகாரணம் ஒன்றும் காணவில்லை. ஆனால் இப்படி சிராவணத்தை மாத்திப்போட்டவர்கள் முன் வருஷங்களில் போட்டது தப்பு என்றாவது அல்லது இப்போது போட்டது தப்பு என்றாவது ஒப்புக்கொள்ள வேணுமேதவிர இரண்டு காலங்களிலும் போட்டது சரிதான் என்று ஒரு விதத்திலும் சொல்லமுடியாது.

किंकृतकार्यद्वेषो धर्मं प्रति विमुखता कृतावज्ञा ।
मूर्च्छन्त्यमी विकाराः प्रायेणैश्वर्यमत्तेषु ॥

என்பதுதான் ஏற்படுகிறது.

மேற்சொன்ன நோட்டீஸ்களில் காண்பிவித்திருக்கிற வைத்தியனாத தீக்ஷிதீயம், நிர்ணயஸிந்து, தர்மபிரவிருத்தி, காலநிர்ணய சந்திரிகா விபுதகண்டபூஷண(ம்) தசநிர்ணய(ம்) ஸ்மிருத்யர்த்தஸாரம் முதலான கிரந்த வசநங்களாலும் த்விதீயாத்யுபாகர்மம் சிராவணத்திலேயே என்ன தோஷமிருந்தாலும் செய்யவேணுமென்பது ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. அப்படியே நாளது வருஷத்தில் பூத 6ம் நெம்பர் ஹெட்வர்டு ஸர்வமுகூர்த்தம், கருங்குளம் புதுக்கோட்டை காலேஜ் முதலான அனேக பஞ்சாங்கங்களிலும் சிராவணத்திலேயே ருக்யஜுருபாகர்மம் போடப்பட்டுமிருக்கிறது. இப்படியிருக்க சில ஸாமான்னிய வியுத்பந்நர்கள் வைத்தியநாத தீக்ஷிதீயத்துக்கு இப்படித்தான் அர்த்தமென்று பூர்வமீமாம்ஸாதி விஷயங்களை நன்றாய்த்தெரிந்துகொள்ளாமலும் தீர்க்காலோசனை செய்யாமலும் சொல்லுகிறார்கள். அது சில ஸாமானிய ஜனங்களுக்கு பிரமத்தையுண்டுபண்ணுமே தவிர பூர்வமீமாம்ஸாதிசாஸ்திரஞ்ஞாளான தர்மசாஸ்திரஞ்ஞானிடத்தில் கொஞ்சமும் நிலைபெறவே மாட்டதென்பது நிச்சயம். ஸ்ரீ காஞ்சீபுரத்தில் வித்வச்சிரோமணியான பிர்ம்மஸ்ரீ வில்லியம்பாக்கம் கோபாலதாதாசாரியாவர்களால் அனேக மீமாம்ஸா நியாயங்களுடன் ஏற்படுத்தப்பட்ட சிராவண விசாரமென்று ஒரு ஸஞ்சிகையும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் வித்வான்களும் பிராமணப் பிரபுக்களும் மத்த ஸாமானிய பிராமணர்களும் இதுகளை எல்லாம் கவனித்துப்பார்த்து தீர்க்காலோசனைசெய்து இந்த சிராவணத்திலேயே ருக்யஜுரூபா கர்மங்களைச் செய்வார்களென்று நம்புகிறோம், அப்படியில்லாமல் இந்த சிராவணத்தைத் தவறிவிட்டால் பச்சாத்தாபத்துடன் மகா பிராயச்சித்தம் செய்துகொண்டு பாத்திரபதத்தில் ருக்யஜுரூபா கர்மம் செய்யவேண்டியதாய்வரும். ஆகையால் பெரியோர்களுடைய யோக்கியதையையும் மகிமையையும் முன் காலத்து பஞ்சாங்கங்களில் போட்டிருப்பதையும் ஸாதுககள் விசேஷமாய் கவனிக்கவே செய்வார்களென்று நம்புகிறோம். சுபம்,

பிரபவ-ஹு } சங்கரநாராயண ஸோமயாஜியள்,
ஆடி-மீ 1வ } ஸேனாதிபதி கனபாடியள்.

இந்த பத்ரிகையினால், மஹா பண்டிதர்களான முன்னோர்களின் அபிப்ராயமும், ஆசாரமும், பஞ்சாங்ககணகர்களின் கொள்கைகளும், தெளிவாய் வெளியாகின்றன. இதனால், த்விதீயாதி உபாகர்மாக்களுக்கும் தோஷங்களைப் பார்க்கவேண்டும் என்கிற கொள்கையை முன்னோர்கள் அங்கீகரிக்கவில்லையென்றும் பிரதமோபா கர்மா மாத்திரம்தான் நிர்துஷ்டகாலத்தில் செய்ய வேண்டும் என்றும், அபிப்பிராயப்பட்டிருக்கிறார்களென்றும் ஏற்படுகிறது.

(தொடரும்) சி. ர. ஸ்ரீநிவாஸன்.

ஒரு மதிப்புரை

வேதலக்ஷண ஸித்தாஞ்ஜனம்.

அக்னிஹோத்ரம். ஸ்ரீராமானுஜ தாதாசார்ய ஸ்வாமிகளால் மணிப்ரவாளவடிவமாக எழுதி வெளியிடப்பட்ட இப் பிரபந்த ரத்னத்தைப் பார்க்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததைக் குறித்து நான் சந்தோஷப்படுகின்றேன்.

இவ் வுத்தம கிரந்தத்தை எழுதிய ஸ்ரீராமானுஜ தாதாசார்ய ஸ்வாமிகளுடைய நியாயாதி ஸாமான்யசாஸ்திர பாண்டித்யமும், வேதலக்ஷண பாஷ்யாதிக்கிரந்த விசாரசாதுர்யமும், ஸ்வாபாவிகமாயுள்ள விநயாதிகுண விசேஷங்களும், விஷய க்ரமமாய் வெவ்

வேறு மகுடங்களின் கீழ் வெகு துருஹ விஷயங்களை வெகு ஸுலபமாகவும், ஸங்கிரஹமாகவும், உசிதமாகவும், போதகமாகவும், தகுந்த பிரமாணங்களுடன் விமர்சம் செய்யும் அழகும் இக் கிரந்தத்தை வாசிக்கும் எவருக்கும் புலப்படாமலிருக்காது.

வேதம், லக்ஷணம் இவைகளின் அத்தியயனம் லோபத்தை அடைந்த இந்த காலத்தில் இப்படிப்பட்ட கிரந்தத்தை எழுதுவதும் பார்ப்பதும் துர்லபமாகப்போனபடியால் இந்த ஸ்வாமிகளின் ப்ராசீன ஸம்பிரதாயானுஸாரமாக ஏற்பட்ட இந்த ஸத்காரியப்பிருவிருத்தியைக் கண்டு வைதிகராயிருப்பவர் ஸந்தோஷத்தை அடையாமலிருக்கமுடியாது.

இந்த கிரந்தமானது, காஞ்சீபுரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்காசார் ஸ்வாமிகளால் ப்ராசீன வேதலக்ஷணக் கிரந்தங்களையும், பட்டபாஸ்கர வித்யாரண்யாதி பாஷ்யகாரர்களையும், பரிஹஸித்தும் தூஷித்தும் வேதவிஷயமாக எழுதப்பட்ட "வேதாத்யயன ஸர்வஸ்வம்" என்ற கிரந்தத்திற்கும், அந்த ஸ்வாமிகளாலேயே தனது சிஷ்யன் பெயரால் வெளியிடப்பட்ட "ஸர்வஸ்வ ஸம்ரக்ஷணீ" என்ற கிரந்தத்திற்கும் தக்கபடி மறுமொழியளிப்பதன்பொருட்டு ஏற்பட்டதாகும்.

காஞ்சீபுரம் ஸ்ரீஸ்வாமிகள் வேதலக்ஷண கிரந்தங்களெல்லாம் வ்யுத்பத்தியற்றவர்களுக்கேயொழிய வ்யுத்பத்தியடைந்த பண்டிதர்களுக்கில்லை என்பதாதி தூஷணங்களைச் செய்திருக்கின்றார்கள். இதை எந்த வைதிகராவது ஸம்மதிப்பாரோ? பண்டிதனோ? அல்லது அபண்டிதனோ யாராயிருந்தாலும் லக்ஷணாதி கிரந்தமூலமாக வேத ஸ்வரூபம், அதன் அர்த்தம் முதலியவற்றை விசாரித்தறிந்துகொண்டால்தான் நியமாதிருஷ்டமேற்படும் என்பது நியாய ஸித்தம். அப்படியே அபண்டிதர்களுக்காகவே அக் கிரந்தங்கள் ஏற்பட்டனவென்று ஒப்புக்கொண்டுவிட்டால் அக் கிரந்தங்களுக்கு ஏதாவது குறைவு ஏற்பட்டுவிட்டதாகக் கருதக்கூடுமா? ஆகவே காஞ்சீபுரம் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் தம்மிடமுள்ள தப்பிதங்களை இந்த கிரந்தத்தின்மூலமாக மாற்றிக்கொண்டு மேன்மேலும் இச் சண்டையை வளர்த்தாமல் மூடிக்கொண்டு போனார்களானால் வெகு உசிதமாயிருக்குமென்பது ஆஸ்திகர்களின் அபிப்ராயம்.

நிற்க, இந்த கிரந்தத்தில் அங்கங்களும், லக்ஷணக் கிரந்தங்களும், வேதங்களுக்கு உபயோகப்படும் பிரகாரமும் வேதங்களில்

உள்ள ஸ்வரபேத வியவஸ்தையும், ப்ராதிசாக்யாதிகளின் ஆவச்ய கதையும், நாம் அறிந்துகொள்ளவேண்டிய இன்னும் பல விஷயங் களுமடங்கியிருக்கின்றன.

ஆகவே இக்கிரந்தமானது வேத ஸம்பந்தமாயுள்ள விஷயங் களையறியவிரும்பும் மாணவர்களுக்கும் மற்றுமுள்ள வித்வான் களுக்கும் மிகவும் உபயோக்மாயுள்ளதென்பதில் சந்தேகம் இல்லை.

இப்படிப்பட்ட ஸத் கார்யத்தில் பிரவிருத்தித்த ஸ்ரீராமானுஜ தாதாசார்யஸ்வாமிகளவர்களுக்கு ஸர்வேச்வரன் தீர்க்காயுஸ்ஸை யும், ஸகல ச்ரேயஸ்களையும் அனுக்கிரஹிப்பார் என்பது எனது பிரார்த்தனை.

இப்படிப்பட்ட ஸத் ப்ரவிருத்தியால் இவரிடம் ஒவ்வொரு ஆஸ்திகரும் கிருதக்ஞத்தை பாராட்டி இந்த ஸ்வாமிகளை மேன் மேலும் உத்ஸாஹப்படுத்துவார்களென்று நான் நம்புகிறேன்.

சுபம். **V. J. S.**

ஸ்ரீபத்ம புராண அரங்கேற்றுபடி.

சென்னை பதினெண்புராண ப்ரசுரசபையின் ஆதரவில் தம்பு செட்டித்தெரு ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதி பதி ஸ்ரீசங்காரசார்ய ஸ்வாமிகள் அவர்களின் பூர்ண அனுக்ர ஹத்தைப்பெற்று நடைபெற்றுவரும் பதினெண்புராண ப்ரவச னத்தில் பலரது ப்ரார்த்தனைக்கிணங்கி அவைகளைச் சுருக்கமாகத் தமிழில் வெளியிடக்கருதி அச்சிட்டுவரும் புராணங்களில் இரண் டாவதாக ஸ்ரீபத்மபுராணம் சென்றவாரம் வெளிவந்தது. அன்று வழக்கப்படி ஸ்ரீபகவத்பாதாளுக்கு விசேஷ பூஜை செய்து பல பண்டிதர்களுடைய மத்தியில் ஷை புராணத்தின் வாலாற்றை ஆசிரியர் ஸாஹித்யவாங்முகபூஷணம் ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா அவர்கள் விளக்கிக்காட்டினர். சபையோர் அனைவரும் அதை ஆமோதித்து ஷை ஸபை லோகோபகாரமாகச் செய்து வரும் வேலையைக்கொண்டு கொண்டாடினார்கள். ஷை புஸ்தகம் சென்னை தம்புசெட்டி வீதி 154-நெ, ரிலும், 5-நெ. புதுத்தெரு மாம்பலம் K. கங்காதரய்யரவர்களிடமும் கிடைக்கும். ஆசார்ய

பகவத்பாதாளது கருத்துக்கிணங்கி இச் சபையின் நோக்கத்தையும் மதித்து பாரதமக்கள் அனைவரும், சிறப்பாக பெண்களும் இந் நூலைவாங்கிப் படித்தால் கலியினது கோலாஹலம் குறைந்து தர்மம் செழித்து ஓங்கும். எங்கும் காணாத பல கதைகள் மூலமாக ஸதாசாரமும், வேதாந்தமும் இங்கு அத்புதமாகக் கூறப்பட்டிருக்கின்றமையால் ஸதாசாரத்தைக் கெடுக்கும் நாவல்களைப் படிக்கவிடாமல் பெண்மக்களுக்கு இதை அளித்தல் மிகச் சிறந்த தர்மமாகும். எளியவரும் இதைப் படிக்கவேண்டும் என்கிற எண்ணத்தால் இதற்குச் சிலவானதற்குமாத்திரம் விலை வைத்துள்ளோம். இதை உணர்ந்து ஆஸ்திகமகாஜனங்கள் இப் பதினெண் புராணங்களையும் வாங்கிப் படிக்கவேண்டுமாறு பிரார்த்திக்கிறோம்.

ஏற்கனவே வெளிவந்த ஸ்ரீமார்க்கண்டேயபுராணம் 6-அணாவும், ஸ்ரீ பாத்ம புராணம் 12-அணாவும் விலை வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் சேர்த்து வாங்குவோருக்கு விலை ரூபா ஒன்று. தபால் ஜார்ஜ் 4-அணா வி—பி சார்ஜ் அதிகமாகுமாதலால் ரூ 1—4—0 மணியார்டர் அனுப்பிகிறவர்களுக்கு ஜாக்ரதையாக வந்துசேரும்படி அன் ரிஜிஸ்டர்ட் பார்சலில் அனுப்பப்படும். இதை வியாபார தோரணையில்லாது லோகோபகாரமாகச் செய்வதால் எல்லோரும் இதை ஆதரிக்கும்படி வினயபூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

154. தம்புசெட்டிதெரு, சென்னை.

ல. ராமச்சந்திர சாஸ்திரி,
K. கங்காதர அய்யர்,
பிரசுர கர்த்தர்கள்.

ஸ்ரீஜகத்குரு வித்யாஸ்தானம்வித்யோல்லாஸினீஸபா.

திருவானைக்காவலென்னும் ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் விளங்கா நிற்கும், கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் வித்யாஸ்தானத்தில் ஆங்கீரஸ-ஹு ஆடி-மீ 19உ புதன்கிழமை மாலை 4 மணிக்கு வித்யோல்லாஸினீ ஸபையினுதாவில் அவ்வித்யாஸ்தானம் வேதாந்த உபாத்தியாயர் போலகம் பிரும்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகள் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்வாக்யார்த்தமும் உபன்யாஸமும் நடைபெற்றது. அச்சமயம் பிரும்மஸ்ரீ கவிரத்ன மஹோபதேச

க. ப. பஞ்சாபகேசசாஸ்திரிகள் முதலிய அனேக வித்வான்களும் அனேக ஆஸ்திக சிரோமணிகளும் வந்திருந்தார்கள்.

பிறகு ஒரு வித்யார்த்தி மங்களாசரணம் சொன்னபிறகு அவ்வித்யாஸ்தானம் வேதாந்த வித்யார்த்தி அத்தாழநல்லூர் கிருஷ்ணசிரௌதிகளால் ப்ரம்மஸூத்திர ஸங்கரபாஷ்யத்தில் ஒரு வாக்யார்த்தம் சொல்லப்பட்டது. பிறகு பேரூர் பிரும்மஸ்ரீ M. நடேசசாஸ்திரிகளால் "பக்தி" என்னும் விஷயம் உருக்கமாயும் தெளிவாயும் உபன்யசிக்கப்பட்டது.

ஈசுவரனிடத்தில் பக்தியினுல் மோக்ஷரூப நற்கதியையடைய முயலவேண்டும் என்று உபன்யாசம் முடிந்தவுடன் இந்தபிரகாரம் ஒவ்வொரு பிரதமைதோறும் இந்த ஸபையினுதாவில் வாக்யார்த்தங்களும் உபன்யாசங்களும் நடக்கவேண்டுமென்ற தீர்மானத்துடனும் அக்கிராசனருக்கு வந்தனோபசாரத்தோடும் ஸபையானது கலைந்தது.

அடுத்த பக்ஷம் ஆவணி-மீ 2உ பிரதமையன்று மாலை 4 மணிக்கு வித்யாசாலை வேதாந்தவித்யார்த்தி R. ஸுப்பிரமணிய சிரௌதிகளால் வாக்யார்த்தமும், வேதாந்தவித்யார்த்தி மேலக்காவேரி சிவராம சாஸ்திரிகளால் 'தர்மம்' என்னும் விஷயத்தைப் பற்றி உபன்யாசமும் நடைபெறுமென தீர்மானிக்கப்பட்டது.

ஜகத்குரு வித்யாஸ்தானம் வித்யோல்லாஸினீஸபா
காரியதரிசி, ராமசுவாமி சிரௌதிகள்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

பிருஹத்ரதன்.

1. மகததேசத்தில் பிருஹத்ரதன் என்றோர் அரசனிருந்தான் அவன் மிக்க பலசாலி. தர்மிஷ்டன். யாகத்தில் அவனுக்கு அதிக ஆசை உண்டு. அவன் காசிராஜாவின் பெண்கள் இருவரை மணந்தான். கிருஹஸ்தனுக்குரிய தர்மங்களைத் தவறாமல் அனுஷ்டித்து வந்தான். எல்லோருமவனைப்போற்றினர். எல்லாந்தானிருந்தது. ஆயினுமென்ன?

2. மநுஷ்யப்பிறவி அல்லவா? அதற்கு ஏதேனும் ஒரு குறை இருக்குமன்றோ.? பிருஹத்ரதனுக்கு புத்ரபாக்யமில்லை. பல காம்ய

கர்மங்களைச் செய்தான். குழந்தை பிறக்கவில்லை. ராஜ்யத்தில் வெருப்புகொண்டான். மந்திரியிடம் அதை அளித்தான். தவம் செய்ய வநம்சென்றான். இருமனைவிகளும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

3 சண்டகௌசிகர் என்று ஓர் முநி. அவர் கக்ஷீவானது புதல்வர். அவரைப்பற்றி அரசன் அடிக்கடி கேட்டிருக்கிறான். அவரை தரிசிக்கவேண்டும் என்று ஆசைகொண்டான். தற்செயலாக சண்டகௌசிகர் அங்குவந்தார். ஓர் மாத்தடியிலே வீற்றிருந்தார். அரசன் அவரை வணங்கினான்.

4. இவ்வளவு இளமையிலேயே ஏன் தபோவநம் வந்தாய் என்றார். அவன் தன் குறையைச்சொன்னான், உடனே திடீரென்று ரிஷியின் மடியில் ஓர் மாம்பழம்விழுந்தது. அது உலராமல் கிளிகொத்தாமல் நன்றாக இருந்தது. ரிஷி அதை எடுத்தார். ஜபம்செய்தார். அரசனுக்களித்தார்.

5. நல்ல குழந்தைபிறக்கும். நாட்டிற்குப்போ. புத்ரனுக்கு பட்டாபிஷேகம் செய்தபிறகு வநத்திற்கு வா என்றார். அரசன் அப்படியே என்று ஊருக்குக்கிளம்பினான். அவன் இரு மனைவிகளிடமும் பக்ஷபாதமில்லாதவன். ஆதலால் மாம்பழத்தை அவ்விருவருக்கும் கொடுத்தான். அதைப் பாகியாக்கி இருவரும் சாப்பிட்டனர்.

6. ரிஷியின் அருளால் கர்ப்பமானார்கள். அரசன் ஸீமந்தம் முதலியவைகளைச்செய்தான். பத்தாம்மாஸம் ப்ரஸவித்தனர். இருவருக்கும் ஒருகால் ஒருகை பாதி உடலாக குழந்தைபிறந்தன. இருவரும் இதைப் பார்த்து பயந்தனர். இவர்களது தாதி இரண்டையும் வெண்பட்டால் மூடி இரவில் நாச்சந்தில் எறிந்தாள்.

8. அங்கு ஜரை என்றோர் ராக்ஷஸிவந்தாள். இப்பாதி குழந்தைகளைக்கண்டாள். இதைப் புசிக்கவிரும்பினாள். தைவச்செயலாக இரண்டையும் ஒன்றாகச்சேர்த்தாள். உடனே அது ஓர் குழந்தையாகஆனது. அழுதது. ஜரை அதைக் கையிலெடுத்துக்கொண்டாள். ப்ருஹத்ரதனிடம் கொடுத்தாள். புத்ரனில்லாத நீ இதை வைத்துக்கொள் என்றாள்.

8, உடனே அரசனிதை வாங்கி மனைவியிடம் கொடுத்தான். அவர்கள் பாலூட்டி வளர்த்தனர். அரசன் ஜரையை நீ யார்? என்று கேட்டான். அவள் கூறினாள். யான் க்ருஹதேவதை

என்னைக் குழந்தையுடன் சித்ரத்தில் எழுதி நீ அர்ச்சித்தாய், இப்படி பூஜிப்போருக்கு நான் நன்மைசெய்வேன்.

9. வீட்டை அலங்கரிக்காமலும் என்னைப் பூஜிக்காமலுமிருப்போரைக் கெடுப்பேன். உன்னிடம் மிக ஸந்தோஷங்கொண்டேன். ஆதலால் இக்குழந்தையைப் புஜிக்கவில்லை. என் பெயரை இதற்கு வை. என்று கூறி மறைந்தது. அரசன் ஜரை சொன்னபடி அக்குழந்தைக்கு ஜாஸந்தன் என்று பெயரிட்டான்.

10. பெரியோரை ஸேவித்தான் அரசன் புத்ரனைப் பெற்றான். வீட்டை நன்கு அலங்காரமாகவைத்து த்வாரபூஜை செய்ததால் இழந்தகுழந்தையைப் பெற்றான். ராக்ஷஸியும் தார்மிகனுக்கு உதவிசெய்வாள். அரசன் நன்றி மறவாமல் குழந்தைக்கு ஜாஸந்தன் என பெயர்வைத்தான்.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

குருக்ஷேத்ரம் 30௳ குரு க்ஷேத்ரவாஸிகள் பஞ்சாப் அரசாங்கத்துடன் பேட்டி கண்டு குருக்ஷேத்ரத்தின் மஹிமையை வர்ணித்து ஆங்கு மாடறுக்கும் தொட்டி முதலியவைகளுக்கு இடமளிக்கக்கூடாதென்று வேண்டினர். இதுவரை பாவனமான அவ்விடத்தை அசுத்தமாக்காமல் அரசாங்கம் காத்து வந்தது. தனது க்ஷேமத்தையும் இந்தியரது மதாபிமான உணர்ச்சியையும் கருதி இனியும் அப்படியே அதைக் காப்பரென நம்புகிறோம். இதில் ஈடுபட்ட ஆஸ்திகரைக் கொண்டாடுகிறோம்.

திகம்பரஸ்வாமிகள் 1௳ நாஸிக் க்ஷேத்ரத்தில் பகவானைப் பல்லக்கில் எழுந்தருளச்செய்து குசாவர்த்த தீர்த்தத்திற்கு செல்ல முன்னும் பின்னும்பல மஹந்துக்கள் யானைமீதேறி பவநிவர பாதாகேச பர்யந்தம் விபூதி அணிந்த பல திகம்பர ஸ்வாமிகள் பகவானுடன் பிரதக்ஷிணமாகச் சென்றனர். (முன் இவர்கள் தடுக்கப்பட்டனர்) ஹரஹரமஹாதேவ என்ற சப்தம் செவிடு படும்படி வானை அளாவி எழுந்தது. 15 ஆயிரம் யாத்ரிகர்கள் இதைத் தர்சித்தனர். பக்திமார்க்கம் இங்ஙனம் விருத்தியாவது ஆஸ்திகர் மனத்திற்கு ஆனந்தத்தை அளிக்கும்.

நியாயவாதி 4உ சென்னை சட்டசபையில் திருப்பதி தேவஸ்தான விஷயமாக வாதம் நடந்தது. தேவாலய வருமானத்தை அதற்கனுகுணமான விஷயத்திலேயேதான் செலவுசெய்யவேணுமென்று ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஓர் திருத்தம் கொண்டுவந்தார். இவர் அரசாங்கத்தில் சட்டசம்பந்தமான யோசனை கூற நியமிக்கப்பட்ட அங்கத்தினர். இவர் திருத்தத்தை அரசாங்க அங்கத்தினர் ஏனையவருடன் சேர்ந்து தோற்கடித்தனர். தேர்ந்தெடுக்கும்படி ஏழு கமிட்டி மெம்பரால் தேவஸ்தான நிர்வாஹம் நடைபெறுமாம். 1500 ரூ சம்பளத்தில் ஓர் உத்தியோகஸ்தர் நியமிக்கப்படுவாராம். நியாயவாதியின் சொல் ஏற்கப்படவில்லை. ஆயினும் அவரை ஆமோதிப்பது நம் கடமை.

தார்மிக தனிகர் 4உ கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமியைத் தர்சிக்க கல்கத்தாவிலிருந்து ஸ்ரீராம்குவார் பாங்கர் என்ற தனிகர் வந்தார். அவர் ஆங்குள்ள த்வஜஸ்தம்பத்தை ஸ்வர்ணமாகச் செய்ய 5000ரூ அளிப்பதாகவும், அம்பிகையின் ஆலயத்தை கட்டுவதாகவும் வாக்களித்தார். இவரன்றோ தனம் படைத்தவர்! இவரன்றோ தார்மிகர் !

ஸத்விஷயம் 4உ கும்பகோணம் டபீர் படித்துறையில் ப்ராம்மண தர்மம் என்பதைக் குறித்து ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியார் ஓர் உபன்யாஸம் செய்தார். இவர் மதவிஷயமாக ஏற்பட்ட ஓர் கமிட்டியின் அங்கத்தினர். 3உ ஸப்ஜட்ஜ் பஞ்சாபகேசய்யர் நாகையில் கீதையைக்குறித்து ஓர் அழகான உபன்யாஸம் செய்தார்.

ஸதாசாரத்தைக் கைக்கொள்ளல் 2உ சிரோமணி பட்டம் பெற்றவர்களுக்கு ஓர் தே நீர் விருந்து நடந்தது. அது ஸமயம் ஸ்ரீமான் K. பாலசுப்ரமண்யய்யர் ஓர் உபன்யாஸம் செய்தார். வைதிகமாணவர்களுக்கு வேண்டிய உபதேசத்தை நன்றாக சொல்பவரவர். புதிதாக சிரோமணி பட்டம் பெறுவோர் சிலர் தங்கள் அருகில் வரும் ஏனையோரைப் போல் நாகரீக வேஷத்தில் எல்லையற்ற மோஹங்கொள்கின்றனர். ஆகையால் சில துராசாரங்கள் தோன்றுகின்றன. அதைவிட்டு ஸதாசாரத்தைக் கைக்கொள்வாராகில் அவருக்கும் க்ஷேமமுண்டாகும். தே நீர் விருந்தில்லாது வித்வத்ஸபை என்று பெயரிட்டிருக்கலாம்.

வே. ஸோமதேவசர்மா.